*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*20 06 2026 SATURDAY 06 45 PM*
*வணக்கம் - மாநில செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 23வது தவணைத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று விடுவிக்கிறார்.*

- *வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களை சுயசார்பு உடையவர்களாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

- *நீட் மறுதேர்வு நாளை நடைபெறவுள்ள நிலையில், மாணவர்கள் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனை பெற மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.*

- *மேகதாது அணை தொடர்பான சட்டப்பேரவை தீர்மானத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தை அஇஅதிமுக ஆதரிக்கவில்லை என்று அக்கட்சி கூறியுள்ளது.*

- *இந்தியா - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி சென்னையில் இன்று நடைபெறவுள்ளது.*

*>>>>>>>><<<<<*

*விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ், 23வது தவணைத்தொகையை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று விடுவிக்கிறார்.*

*மேற்குவங்க மாநிலத்தில் இரண்டு நாள் பயணம் மேற்கொள்ளவுள்ள அவர், ஹூக்லி மாவட்டத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில், இந்த நிதியை விடுவிக்கிறார்.*

*இதையடுத்து, நாடுமுழுவதும் உள்ள 9 கோடியே 44 லட்சத்திற்கும் அதிகமான விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு 18 ஆயிரத்து 880 கோடி ரூபாய் வரவு வைக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இந்த நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கான பல்வேறு திட்டங்களையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைக்கவுள்ளார்.*

*>>>>>>>><<<<<*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம், இளைஞர்களை சுயசார்பு உடையவர்களாக மாற்றுவதில் முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

சமூகவலைதளத்தில் இக்கருத்தினை பதிவிட்டுள்ள அவர், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதிலும், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டம் முக்கிய மைல் கல்லாக திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 15 லட்சத்திற்கும் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் இளைஞர் சக்தியை, பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதன் மூலம், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான பயணம் விரைவுபடுத்தப்படும் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி நேற்று நாடுமுழுவதும் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக சென்னை, அம்பத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 500-க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

மத்திய அரசின் இந்த ஊக்கத்தொகை பயனுள்ளதாக உள்ளது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 25 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

இந்து சமய அறநிலையத்துறைக்கு உட்பட்ட கோவில்களின் நிதியில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட நிர்வாக உத்தரவு ரத்து செய்யப்படுவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், நீதிமன்ற தடை ஆணை காரணமாகவும், கோவில்களின் நிதிச் சுமையை கருத்தில் கொண்டும் 245 கோடி ரூபாய் மதிப்பிலான 46 பணிகளுக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு, கோவில்கள் மற்றும் பக்தர்கள் பயன்பெறும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் இளநிலை மருத்துவப் படிப்புக்கான நீட் மறுதேர்வு நாளை நடைபெறவுள்ள நிலையில், மாணவர்கள் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனை பெற மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தொலைபேசி வழியாக ஆலோசனை பெறுவதற்கு மாணவர்கள் மற்றும் பெற்றோர் 1 4 4 1 6 அல்லது 1 0 4 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள் மற்றும் மருத்துவர்கள் மூலம் இந்த சேவை வழங்கப்பட்டு வருவதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<

மேகதாது அணை திட்டத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று தமிழக சட்டப்பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட தீர்மானத்தை மட்டுமே அஇஅதிமுக ஆதரித்ததாக அக்கட்சியின் பொதுச்செயலாளர்

திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதலமைச்சர் கடைசியாக முன்மொழிந்த இடைச்செருகல் தீர்மானத்தை அஇஅதிமுக ஆதரிக்கவில்லை என்றும், திருத்திய தீர்மானம் அரசினர் தனித் தீர்மானம் ஆகாது என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுவாக ஒரு தீர்மானத்தின் மீது திருத்தங்கள் முன்மொழியப் பட்டால், அது வழிமொழியப்பட்டு பேரவையின் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பின்னர் தான் சேர்க்கப்பட வேண்டும். ஆனால், நேற்று எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த திருத்தம், விவாதிக்கப்படாமல் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு, திருத்தத்துடன் கூடிய அரசினர் தனித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பேரவைத் தலைவர் அறிவித்தது சட்டப்பேரவை விதிகளுக்கு முற்றிலும் எதிரானது என்று திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

>>>>>>>><<<<<<

நாகப்பட்டிணத்தில் உள்ள மீன்வள பல்கலைக் கழகத்தின் நிறுவன தினத்தை முன்னிட்டு, வேளாண் பெருவிழா நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் திரு. பிரவின்குமார் தொடங்கி வைத்த இந்த விழாவில், சமச்சீராக உரமிடுதல், கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட்-செல்வன் ஜெபராஜ் 42 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடிமின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ஹிஸ்புல்லா அமைப்பினருடான போர்நிறுத்த உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு இஸ்ரேலை, அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

பங்களாதேஷில் கோவில்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து, சிறுபான்மை மக்கள் சார்பில் நேற்று டாக்காவில் பேரணி நடத்தப்பட்டது.

>>>>>>><<<<<<

நீட் மறுதேர்வு குறித்த வினாத்தாள் என்று போலியான வினாத்தாளை விற்பனை செய்த இளைஞர் ஒருவரை, ராஜஸ்தான் மாநில காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

>>>>>>><<<<<<

டெலிகிராம் சமூகவலைதளம் மீதான தற்காலிக தடை செல்லும் என்று தில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

>>>>>>><<<<<<

மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் புதிய அலுவலகம், புதுதில்லியில் உள்ள Talkatora இணைப்பு கட்டிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

*அரியலூரில் இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் நகை வியாபாரிகளுக்கான ஹால்மார்க் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.*

>>>>>>><<<<<<

*மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை திருச்சி ரயில்வே கோட்ட மேலாளர் திரு. பாலகிராம் நெகி நேற்று ஆய்வு செய்தார்.*

>>>>>>><<<<<<

*திருப்பத்தூர் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, காவல்துறை சார்பில் நேற்று நடைபெற்றது.*

>>>>>>><<<<<<

*கல்பாக்கம் அணுமின் நிலைய வளாகத்தில் அணுஉலையை விரிவுபடுத்துவதற்கான திட்டம் குறித்து, தொழில்துறை நிபுணர்களுடனான கலந்துரையாடல் சென்னையில் நேற்று நடைபெற்றது.*

>>>>>>><<<<<<

*சென்னையில் அனுமதியின்றி விளம்பர பதாகைகள் வைத்தால், அபராதம் விதிக்கப்படும் என்று மாநகராட்சி எச்சரித்துள்ளது.*

>>>>>>><<<<<<

*20 06 2026 6 45 விளையாட்டுச் செய்திகள்*

*விளையாட்டுச் செய்திகள்*

*இந்தியா - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.*

*இந்தப் போட்டி சென்னை, சேப்பாக்கத்தில் பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்கவுள்ளது.*

*ஏற்கனவே நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் இந்தியா வெற்றிபெற்று, 2-0 என்ற புள்ளிக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.*

*இந்நிலையில், மூட்டுவலியிலிருந்து குணமாகியுள்ள இந்திய வேகப்பந்து வீச்சாளர் அர்ஷித் ராணா மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

>>>>>>><<<<<<

*c/o உலக கோப்பை கால்பந்து போட்டியில் Morocco 1-0 என்ற கோல்கணக்கில் ஸ்காட்லாந்தை வென்றது.*

*Boston*-ல் இன்று நடைபெற்ற ஆட்டத்தில், தொடக்கம் முதலே *Morocco* அணி ஆதிக்கம் செலுத்தியது,

ஸ்காட்லாந்து அணி பலமுறை முயற்சித்த போதும், கோல் அடிக்கும் வாய்ப்புகளை *Morocco* அணியினர் வெற்றிகரமாக தடுத்தனர்.

*20 06 2026* *6 45* விளையாட்டுச் செய்திகள்-*2*

பிரேஸில் – *Haiti* அணிகளுக்கு இடையேயான ஆட்டம் தற்போது *Philadelphia*-வில் தற்போது நடைபெற்று வருகிறது.

துருக்கி – பராகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டம், சான்பிரான்சிஸ்கோவில் காலை மணி *8.30*-க்கு தொடங்கவுள்ளது.

>>>>>>><<<<<<

விகே-க டெஸ்க்-*17*